**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி</u>**

முன்னிலை: திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை
நடுவர், கொடுமுடி.

2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ம் நாள் புதன்கிழமை

**<u>M.P No.4/2025 in D.V.C.No.6/2022</u>**

1. R.கிருஷ்ணவேணி
2. மகாதேவி
3, பாவாயம்மாள் – மனுதாரர்கள்/2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்

//எதிராக//

R.நதியா – எதிர்மனுதாரர்/மனுதாரர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 15.10.2025ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.A.மனக்க்ஷா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

பு.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பு.சா.2 சாட்சியை திரும்ப அழைக்க கோரியும் மற்றும் வழக்கை மறு திறப்பு செய்ய உத்தரவிடக் கோரியும் கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **<u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு உறுதி கூற்றின் சுருக்கம்</u>**:–

மனுதாரர்கள்மீது பெண்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவுகள் 12, 17, 18, 20(1) மற்றும் 22ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 15.09.2025ம் தேதி ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா இருந்த நாளில் மனுதாரர்கள் தரப்பிற்கு ஆதரவான முக்கியமான ஆவணங்கள் கிடைக்காததால் ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், மேற்படி ஆவணம் மனுதாரர்கள் தரப்பு வழக்கை மெய்ப்பிக்க முக்கியமான ஆவணம் என்றும் கூறியுள்ளார்கள். ஆதலால் ம.சா.2

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2025.10.15 07:16:51 +0530

சாட்சியை குறுக்குவிசாரணை செய்யாததால் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டது. ஆதலால் ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய ம.சா.2 சாட்சியை திரும்ப அழைத்து வழக்கை மறு திறப்பு செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ளார்கள்.

2. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர் மனு உரையின் சுருக்கம்</u>.

மனுதாரர்கள் மனு பொய்யானது, தவறானது, வெறுக்கத்தக்கது, சட்ட திட்டத்திற்கு உட்பட்டதல்ல. எதிர்மனுதாரர் சரியென ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள் தவறானது என மறுக்கிறார். மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், சட்டதிட்டத்திற்கு உட்பட்டதல்ல என்றும் கூறியுள்ளார். மனுதாரர்கள் வேண்டுமென்றே சாட்சியை விசாரிக்கவில்லை என்றும், விசாரணையை முடிக்கவில்லை என்றும் கூறியுள்ளார். ம.சா.2 எதிர்மனுதாரர்/ மனுதாரரின் தந்தை. ம.சா.2 ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றத்தில் ஆஜராகியும் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை என்றும், வழக்கை காலம் கடத்தும் நோக்கத்திலேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கானது நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வருவதால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. 15.09.2025ம் தேதி ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா இருந்த நாளில் மனுதாரர்கள் தரப்பிற்கு ஆதரவான முக்கியமான ஆவணங்கள் கிடைக்காததால் ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், ஆதலால் ம.சா.2ன் சாட்சியம் முடிக்கப்பட்டது என்றும், மேற்படி ஆவணம் மனுதாரர்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.15 07:16:56 +0530

தரப்பு வழக்கை மெய்ப்பிக்க ஒரு முக்கியமாக ஆவணம் என்றும், ஆதலால் ம.சா.2 சாட்சியை திரும்ப அழைத்து வழக்கை மறு திறப்பு செய்ய வேண்டுமென கூறியுள்ளார்கள். எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் பு.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பல சந்தர்ப்பங்கள் கொடுத்தும் வேண்டுமென்றே மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள் தரப்பில் பு.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும், ஆகவே வழக்கை காலம் கடத்தும் நோக்கத்திலேயே தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளார்.

5. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது ராமலிங்கம் என்பவர் மா.சா.2 சாட்சியாக 07.11.2024ம் தேதி விசாரிக்கப்பட்டு மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்டது. 07.11.2024ம் தேதி முதல் ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பல சந்தர்ப்பங்கள் கொடுத்தும் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் 15.09.2025ம் தேதி ம.சா.2ன் சாட்சியம் முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது என்பதை அறிய முடிகிறது. ஆதலால் மா.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய மா.சா.2 சாட்சியை திரும்ப அழைக்க கோரியும், வழக்கை மறு திறப்பு செய்ய கோரியும் இம்மனு தாக்கல் செய்துள்ளதாக மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள். எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பல சந்தர்ப்பங்கள் கொடுத்தும் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை. ஆகவே வழக்கை காலம் கடத்தும் நோக்கத்திலேயே இந்த மனு தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளார்.

6. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது ராமலிங்கம் என்பவர் ம.சா.2 சாட்சியாக 07.11.2024ம் தேதி விசாரிக்கப்பட்டு பல சந்தர்ப்பங்கள் கொடுத்தும் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாததால் 15.09.2025ம் தேதி ம.சா.2ன் சாட்சியம் முடிக்கப்பட்டு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.15 07:17:01 +0530

எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. இந்நிலையில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பில் ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய ம.சா.2 சாட்சியை திரும்ப அழைக்க கோரியும் வழக்கை மறு திறப்பு செய்ய கோரியும் மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்க கூடிய வகையில் இல்லை என்றும், 07.11.2024ம் தேதி ம.சா.2 முதல் விசாரணை செய்யப்பட்டு கடந்த 10 மாதங்களாக ம.சா.2 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் விட்டுவிட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்படுத்தப்பட்ட நிலையில் இம்மனு தாக்கல் செய்துள்ளது வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற நோக்கத்திலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 15.10.2025ம் தேதி இந்த மனு விசாரணைக்காக வாய்தா இருந்த நிலையில் மூத்த வழக்கறிஞர் வெளியூர் சென்று விட்டதால் இன்று விசாரணை செய்ய இயலாது என மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதை பார்க்கும்போது வழக்கை காலம் கடத்தும் நோக்கத்திலேயே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கானது நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வருவதாலும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்க வகையில் இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக** மனுதாரர்கள் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.15 07:17:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்</u>: – இல்லை –
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்</u>:– – இல்லை –

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.15 07:17:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.